பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

**NEW MASTER**
INSTITUTE
241, Navalar Road, Jaffna

89 A/L
ZOOLOGY
Sat & Sun - 8.30 a.m.
விலங்குப்பாகுபாட்டியல்
Sat. & Sun. 11-30 a. m.
சிறுநீர் சனனித் தொகுதி
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

**NEW MASTER**
INSTITUTE
241, Navalar Road, Jaffna

89 A/L
PHYSICS
நிலை மின்னியல்
ஆசிரியர்:
திரு. வர்ணம்
ஆரம்பம்;
10-09-1988
Sat - 2.30 p.m.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஆவணி மீ 29 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 2 (14 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 183

# நாடு கடத்துவதை எதிர்த்து ஈழத்தமிழ் அகதிகள் வழக்கு

## திருச்சி நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்பு

-சென்னையிலிருந்து தி. மேனகன்-

சென்னை, செப். 14

ஈழத் தமிழ் அகதிகள் பலரை கட்டாயமாக நாடுகடத்துவதற்கு இந்திய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

அவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்ட பலரின் சார்பில், ஈழத் தமிழ் அகதிகள் ஐவர் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில், நாடு கடத்தலை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்

அந்த வழக்கு மாவட்ட நீதிபதியினால் (முன்சீப்பினால்) விசாரணை செய்வதற்கென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஐந்து இலங்கை அகதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரஸ்தாப வழக்கு மனுவை முதலாவது கூடுதல் மாவட்ட முன்சீப் என். ராமகிருஷ்ணன் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டார்.

மனு மீதான விசாரணை முடியும்வரை தங்களை இந்திய அரசு அதிகாரிகள் தொந்தரவு செய்யாமல் தடுக்குமாறும் அவர்கள் அம் மனுவில் கோரியுள்ளனர். மனு மீதான விசாரணை செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

மனுவை எதிர்த்து பிரதிவாதிகளான சென்னை மறுவாழ்வு இயக்குநர், திருச்சி தனித்துணை ஆட்சித் தலைவர் (மறு வாழ்வு) ஆகியோர் சார்பில் அரசு வழக்கறிஞர் எதிர் மனுவும் தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர்களான எஸ் மாணிக்கம் உட்பட 5 இலங்கை அகதிகளும் கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

இலங்கை இனக்கலவரத்தைத் தொடர்ந்து உயிருக்குப் பயந்து இந்தியாவுக்குத் தாங்கள் ஓடி வந்து கொட்டப்பட்டு முகாமில் தங்கியுள்ளதாகவும்-

பல சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்துவதாகவும், தம் பிள்ளைகள் படித்துக் கொண்டிருப்பதாகவும்-

இந்த நிலைமையில் அரசு அதிகாரிகள் தங்களை இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி நிர்ப்பந்திப்பதாகவும்-

தங்களால் இலங்கை செல்ல முடியாதிருப்பதாகவும் இவர்கள் தம்

[6ஆம் பக்கம் பார்க்க]

## பதுளையில் மாணவர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு!

மலை நாட்டில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் 16 வயது மாணவன் ஒருவன் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டான்

நான்கு மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

பதுளை நகரில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பஸ்கள்மீது கல்லெறிந்து தாக்கினர். சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தனர்.

இவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்தனர்.

அது பலனளிக்காமல் போகவே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது 16 வயது

[6ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து ஸ்தம்பிதம்; வவுனியாவுக்கு அப்பால் இல்லை

யாழ்ப்பாணம், செப் 14

நேற்று வவுனியாவிற்கும், அதற்கு அப்பாலும் உள்ள இடங்களுக்கான போக்குவரத்துகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன

தென்பகுதியில் நடைபெற்றுவரும் வன்செயல்களை அடுத்து வவுனியாவிற்கு அப்பால் போக்குவரத்துச் சேவைகள் நடைபெறவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கான சேவைகள் நடைபெறவில்லை. ஒருசில பஸ்கள் காலையில் கொழும்பு சென்றனவாயினும், அவைபயணத்தைத் தொடரமுடியாது வவுனியாவுடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுடன் பேசாது எடுக்கப்படும் எந்தத் தீர்வும் சமாதானத்தைக் கொண்டு வராது

### ஆணையாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், செப் 14

விடுதலைப் புலிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணப்படாதவரை இணைப்பு என்றாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி சமாதானம் ஏற்படுவது மிகவும் சாத்தியமற்ற ஒன்றாகும்.

இவ்வாறு யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இணைப்புப் பிரகடனம் வெளியிடப்பட்டது குறித்து ஆணையாளரிடம் கேட்டபொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

நெருக்குதல், நேர அடிப்படையில் செயற்

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14 - 09 - 88
ஆவணி - 29
புதன்கிழமை
சுபநேரம்:
04.33முதல் 06.03வரை
ராகுகாலம்:
12.03முதல் 01.33வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பலராம ஜயந்தி

பிள்ளையார் துணை

### திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் விபவ ஆண்டு ஆவணி 29 ஆம் நாள் இன்று (14- 9- 88) புதன்கிழமை பிரதமை திதியும் கன்னி இலக்கின நட்சத்திரமும் கூடிய சுப யோக சுபதினத்தில் காலை 9 00 மணிக்கும் 12 00 மணிக்கும் இடையில்

செல்வன்
**சிவகுமார்**
(குமார்)
அவர்களுக்கும்

செல்வி
**பத்மராணி**
(பத்மா)
அவர்களுக்கும்

பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப் பெற்று மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு. திருமதி இரத்தினப்பத்தரும் பாரியாரும்
கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி.

திரு. திருமதி அப்புலிங்கமும் பாரியாரும்
கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி.

(6481)

## பண்டத்தரிப்பில் கடைகளைத் திறப்பதில் நிலவும் கருத்து வேறுபாடு

யாழ்ப்பாணம், செப் 14

பண்டத்தரிப்புப் பகுதியில் கடைகளைத் திறப்பதில் வர்த்தகர் சங்க அங்கத்தவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் பண்டத்தரிப்புச் சந்தைப் பகுதி கடை ஒன்றில் வைத்து அமைதிப்படை ஜவான்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து இங்கு கடைகள் எதுவும் திறக்க அனுமதிக்கப்படாதது தெரிந்ததே.

ஆனால் நேற்று செவ்வாய்க்கிழமை காலையில் கடைகளைத் திறக்கும்படி அமைதிப்படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர். ஆயினும் சம்பவம் நடந்த கடையையும் அதன் சுற்றாடலிலுள்ள சில கடைகளையும் திறக்க அனுமதிக்கவில்லை

இதனை அடுத்து, பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்தினர் அமைதிப்படை அதிகாரியை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

குறிப்பிட்ட சிலரின் கடைகள் பூட்டப்பட்டிருக்க, ஏனையவர்கள் மட்டும் கடைகளைத் திறப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 'ஹெலி'கள் நோட்டம்

ஒட்டுசுட்டான், செப் 14

முல்லைத்தீவு, வவுனியா வடக்கு பகுதிகளில் உள்ள காடுகளை நேற்று முன்தினமும் நேற்றும் ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறந்து நோட்டமிட்டுக் கொண்டிருந்தன. (ஒ- 113)

### முச்சந்தி முரளி



பெரிய போராட்டங்களின் பிறகு ஒருமாதிரி 115 பேர் வெளியே வந்தாச்சு. எல்லோரும் அப்பிடியே வந்து விட வேணும்...!

## தெற்கில் 10 பேர் கொலை

கொழும்பு செப் 14

கடந்த 24 மணித்தியாலங்களில் தென் இலங்கையில் 10 பேர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

வலஸ்முல்ல, கிருமை, தங்காலை, அக்குறஸ்ஸ, வீரக்கெட்டிய, ஹிக்கடுவ ஆகிய இடங்களில் இக்கொலைகள் இடம் பெற்றன.

இளைப்பாறியபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் குண்டு வீச்சுக்குப் பலியானார். பாடசாலை அதிபர் ஒருவர் மாணவர்கள் முன்னிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஒ-எ)

அம்பாறை - லகுகலவில்

## நிலக்கண்ணி வெடிக்கு எட்டுப் பொலிஸார் பலி!

### கிராமவாசி ஒருவரும் மரணம்

கொழும்பு, செப்டெம்பர் 14

அம்பாறை மாவட்டத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் எட்டுப் பொலிஸார் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

லகுகல என்னும் இடத்தில் பொலிஸ் ஜீப்வண்டி ஒன்று நிலக்கண்ணி வெடியில் சிக்கிச் சிதறுண்டது.

மகாசலுகல பொலிஸ் தடை முகாமைச் சேர்ந்த இன்ஸ்பெக்டரும் ஏழு கான்ஸ்டபிள்களும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

உயிரிழந்த ஒன்பதாவது நபர், பொலிஸ் ஜீப்பில் பயணம் செய்த ஒரு கிராமவாசியாவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பூஸாவிலிருந்து நேற்று 115 கைதிகள் விடுவிப்பு

கொழும்பு, செப் 14

பூஸா தடுப்பு முகாமிலிருந்து 115 தமிழ் அரசியல் கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை விடுவிக்கப்பட்ட 115 தமிழ் அரசியல் கைதிகளில் 113 பேர் காலியிலிருந்து இந்தியக் கடற்படைக் கப்பலில் காங்கேசன்துறை புறப்பட்டனர்.

கப்பலில் வைத்து இந்திய வைத்திய அதிகாரிகள் விடுதலையானவர்களைப் பரிசோதித்தனர்.

விடுதலையானவர்கள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினர். இரண்டு பேர் தமது குடும்பங்களுடன் சேர்ந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களைச்சேர்ந்தவர்கள் விடுவிக்கப்பட்டவர்களில் இருக்கின்றனர்.

காலியிலிருந்து நேற்றுப் புறப்பட்ட கப்பல் வியாழக்கிழமை காங்கேசன்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது (அ எ)

## 12 நாட்களும் கறுப்புப்பட்டி அணிய மாணவருக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம் செப். 14

தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த பன்னிரண்டு நாட்களிலும் மாணவர்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்து பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்று மாணவர் ஒருங்கிணைப்புக்குழு விடுத்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

பிரசைகள் குழுக்கள் நடத்தும் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளுமாறும் மாணவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக மாணவர் ஒருங்கிணைப்புக்குழு விடுத்த அறிக்கை விபரம் வருமாறு:

தியாகி திலீபன் மறைந்து ஒரு வருடமாகின்றது.

"போராட்ட வடிவம் மாறலாம் ஆனால் போராட்ட இலட்சியம் மாற மாட்டாது" எனத் தலைவர் பிரபாகரன் வரலாற்றுப் புகழ்மிக்க சுது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை விடுவிக்க கோரும் ரிட் மனு தள்ளுபடி

சென்னை. செப். 14

கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 152 பேரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விடுவிக்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை உயர்நீதிமன்ற நீதிபதிகள் டேவிட் அன்னுசாமி, எஸ். ஜனார்த்தனம் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் தள்ளுபடி செய்தது.

திராவிடர் கழகத்தின் தலைமை நிலையச் செயலர் கலி. பூங்குன்றன் இந்த ரிட் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இலங்கையில போரில் காயமடைந்து ஊனமுற்ற நிலையில் சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வந்த போராளிகளும் கைது செய்யப்பட்ட 152 பேரில் அடங்குவர் என்றும் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டியிருப்பதால் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமெனறும் அந்த ரிட் மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த ரிட் மனு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் இந்த வழக்குப் பற்றிதான் எதுவும் வற்புறுத்தவில்லை என்று கூறிவிட்டதால் மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

கைது செய்யப்பட்ட 152 போராளிகளும் தேசிய பாதுகாப்பு சட்டப்படி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## லெபனன் அமைச்சர் கடத்தப்பட்டார்

பேரூட். செப். 14

லெபனன் பாதுகாப்பு அமைச்சர் இனந்தெரியாதோரால் நேற்று தென் பேரூட்டில் வைத்துக் கடத்தப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### திருகோணமலையில் உதயன் - சஞ்சீவி மாவட்ட விற்பனை முகவர்

★ உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளை நேரத்துடன் பெறுவதற்கும்—
★ அர்ச்சுனா சிறுவர் திங்கள் இதழை வாங்குவதற்கும்—
★ உதயன் - சஞ்சீவியில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்கவும்—
★ கொழும்பில் உள்ள "HILSCA" நிறுவனத்தில் கம்பியூட்டர் மூலம் கலர் போட்டோக்களைக் கழுவுவதற்கும்—

நாளை 15 - 9 - 88 முதல் பின்வரும் விலாசத்தை நாடுங்கள்.

**எஸ். சிவஞானசுந்தரம்**
71;1, பிரதான வீதி,
திருகோணமலை.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

## விற்பனைக்கு

சுத்தமான சுகாதார முறைப்படி வெட்டிய புரொயிலர் கோழி இறைச்சி (Halal) விற்பனைக்கு உண்டு தொடர்பு M G M. & Stores, No. 777, K K S. Road, Jaffna. (6390)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் Show Case, சட்டில், மெத்தைகள், விருந்தைக் கதிரைகள், Hall - Set. சாப்பாட்டு மேசைகள், Office மேசைகள், கண்ணாடி மேசை மற்றும் பல பொருள்களும் உடன் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி. (சென் பற்றிக்ஸ் சந்தியருகில்), யாழ்ப்பாணம். (6421)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள்' சேவற் கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Nallur Farm Centre, C/o Nallur வீடியோ செல்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6144)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hyline சறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19. முருகேசர்லேன், நல்லூர். (6143)

தையல் மெஷின் (எலெக்ரிக்). பாவித்த டபிள், சிங்கிள் கட்டில் மெத்தைகள் மற்றும் சகல தளபாடங்கள், சாப்பாட்டு மேசை, விருந்தைக் கதிரைகள், கண்ணாடியேசை, வீட்டுப்பாவனை ShowCase, சிறிய எலக்ரிக் குக்கர், சசற் றேடியோ, குசினிப் பொருள்கள், Baby Cot, Hall Set, Pyrex கிளாஸ் வகைகள், காரியாலய மேசை, Pram மெஷின் உடன் விற்பனைக்குண்டு 120 இராசாவின் தோட்டம் ரோட் யாழ்ப்பாணம். சராச் அருகில். (5433)

மோட்டார் சையிக்கிள் Honda, Econo-power 90, விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: 12, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (6436)

யாழ்ப்பாணம் முனிசிப்பல எல்லைக்குள் காணிகள் குத்தகைக்கும் விற்பனைக்கும் உண்டு. வீடும் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்: ச. துரைரத்தினம், 50பாரதிவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (6397)

(1). இறைச்சிக்கோழி 1கிலோ- 45/-, (2). சேவல்குஞ்சு விருத்துப் பருவம். (3). நல்லெண்ணெய் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. அன்னலிங்கம், கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (6503)

வேம்படிக் கல்லூரிக்கு அருகில் வீடு வாடகைக்கும், தளபாடம் விற்பனைக்கும் உண்டு தொடர்பு கொள்க:- திருமதி. துரைராஜா, இல. 5, 1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (6504)

### விற்பனைக்கு

வெல்டிங் டிரான்ஸ்போமர் (ஒட்டுங்கருவி) இதற்குரிய உபகரணங்களும், அத்துடன் இரண்டு Chalyயும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 175A, சிவன் பண்ணை ரோட், கொட்டடி, யாழ்ப்பாணம். (6428)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள். (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம் (C 124)

## தேவை

சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தையல் நிலையத்திற்கு நல்ல தையல் அனுபவம் உள்ள பெண் பிள்ளை தேவை. 20-9-88 க்கு முன்பு நேரில் வரவும். க.சிவஞானராசா, அந்தோனியார் கோவில் முன்பாக, சுன்னாகம். (6393)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 2 படுக்கை அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட ஒரு வீடு தேவை. நல்ல நிலையிலுள்ள ஒரு வெஸ்பா (Vespa) ஸ்கூட்டர் தேவை தொடர்பு; J P T Ltd 3, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம் (6396)

### சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும் சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N P லோகேஸ்வரன், No 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி. நல்லூர். (6151)

### வேலை தேவை

கணக்கியலில் எல்லா விதமான புத்தகங்களும் தமிழில் பராமரிக்கத் தெரிந்த. 25 வருடங்களுக்கு மேல் இலற்றில் அனுபவமுள்ள ஒருவர் வேலை தேடுகின்றார் தொடர்பு கொள்ளவும்: க. கணேசன், பெரிய மணல், காரைநகர். (6394)

### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 33 வயது எஞ்சினியர் மகனுக்கு பெற்றோர் அதே இனத்தைச் சேர்ந்த மணமகளைத் தேடுகின்றனர். அவுஸ்திரேலியாவுக்குப் போவதற்கு விருப்பமுள்ளவராக இருத்தல் வேண்டும். சாதகக்குறிப்பு மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 361, C/o உதயன், யாழ்ப்பாணம். (6398)

## கல்வி

G. C. E A/L 89 Aug இற்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் 14- 09- 88 காலை 8 . 00 மணிக்கு ஆரம்பமாகிறது. Modern Education Centre Karaveddy (கிளை) பருத்தித்துறை. (6351)

### Spoken English with Grammar

Spoken English with Grammarமேற்படி வகுப்புக்களுக்கு உடனுதவியாக கைநூல்கள் Series 2, 3, 5, 6 வெளிவந்துள்ளன கிடைக்கும் இடம்: S. B. Iyar, 12, Wyman வீதி, நல்லூர். (6182)

### Spoken English with Grammar

புதியபிரிவு அரச ஊழியர்களது வசதிக்காக மாலைநேர வகுப்புநேரம்: 4 மணி — 6 மணி செவ்வாய், வியாழன் நாட்களில் மட்டும். ஆரம்பம்; 20 - 9 - 88 S. B. Iyar, 12. வைமன் வீதி, நல்லூர் (6435)

### தவறிவிட்டது

பிராங் றிச்சார்ட் செல்வதவராசா நல்லையா 'இன்ப வாசா' உடுப்பிட்டி ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும், உத்தியோக அடையாள அட்டையும் (M S. Sammuel Sons & Co Ltd Mannar ) இல. 751 வழியில், வானில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேல்முகவரிக்கு அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6505)

ஸ்ரீ புருசோத்தமன் ஸ்ரீ பிரகஸ்பதி ஆகிய எனது அடையாள அட்டை இல. 701640225 V நல்லூர் தேரன்று கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6425)

சம்பந்தர் ஆசியநாதன் DL 001751 இலக்க வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தைத் தவற விட்டு விட்டேன். கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6400)

### அடுத்த வருட இலவசப்பாடப் புத்தகம்

சுன்னாகம், செப் 14 அடுத்தவருட உபயோகத்துக்காக வழங்கப்பட இருக்கும் இலவச பாடப் புத்தகங்கள் இவ்வருடம் அக்டோபர் மாத இறுதியில் வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

### 2ஆவது ஆண்டு
அன்புத் தாயின் நினைவு



**கந்தையா நல்லம்மா**

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவு
என்றும் நீங்காது.

மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

க. பூபாலசிங்கம்,
பொற்பதி ரோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(C-178)

## WANTED

Civil, Electrical and Mechanical Engineering Organisation Need For Immediate Employment, Technical Officers And Work Supervisors, Preferably Retired Officers Salary Negotiable Apply With Details of Qualifications And Experience Before 30th of this Month

**192, C/o UTHAYAN.**
((431)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 1919-10-10
உதிர்வு: 1988-8-17

**திருமதி நடராசா செல்லம்மா**

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் கருணை மழையுடன் எங்களையெல்லாம் வளர்த்த அன்புத் தெய்வம் நீ அம்மா! உங்கள் நிழல் இழந்து வாடுகின்றோம். உங்கள் அன்புமுகம் நாம் உயிர் உள்ள வரை எம்முடனே நிலைக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

15-9-88 இல் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் உறவினர்களையும் நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

ந. யோகராசா,
சகுந்தலா மெற்[illegible]
குரும்பசிட்டி, தெல்லிப்பழை. (6481)

## உடன் வேலைவாய்ப்புகள்

### ★ சவூதி அரேபியா

1) சமையல்காரர் (Cook)
2) உதவி சமையல்காரர் (Asst.Cook)
3) சலவைத் தொழிலாளர் (Loundry Men)
4) கூலியாட்கள் (Lobourer)
5) பேக்கரி தொழிலாளர் (Bakers)

### ★ குவைத்

✶ கனரக சாரதிகள் ✶ வீட்டுசாரதிகள்

(கல்ப் லைசென்ஸ் இருப்பவர்க்கு முன்னுரிமை)
6 புகைப்படங்கள், பாஸ்போட், சாரதி அனுமதிப்பத்திரம், தகுதி சான்றிதழ் உட்பட நேரில் வரவும்.

### ★ குவைத் ★ சிங்கப்பூர்
(பணிப்பெண்கள்)

உடன் தொடர்பு முகவரி:
**46, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
(C/88)

## VACANCIES IN Promoters Engineering Co. Ltd.

Leading Company in Jaffna seeks for candidates to fill the following vacancies.

Salaries negotiable with attractive fringe benifits.

**Production Manager:**
Five years experience in plant operation, maintenance and labour management in any private institution.

**Secretary:**
Energetic youngester with sound knowledge of Stenography, book-keeping and pay-roll work.

**Plant Operator Trainees:**
Energetic youngesters with leadership qualities with experience in machinery operation and maintenance.

If you posses the above qualifications please send your C V. to:-

**Regional Director,**
**Promoters Engineering Company Ltd.**
844. Point Pedro Road,
Nallur, Jaffna.

**On or before 21st September 1988.**
(C 58)

## ஓராண்டு நினைவஞ்சலி



**மனவல் ரெபேட்ஸ்**
**(அருமைநாயகம்)**
(அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரர்)

பிறப்பு: 1937 - 5 - 12
இறப்பு: 1987 - 9 - 14

ஓராண்டு கடந்ததையா
ஓலமின்னும் ஓயவில்லை
இதயத்தில் விதைத்த அன்பு
இன்று வரை மடியவில்லை
பாசமுடன் உமை நினைந்து
பரமனை வேண்டுகின்றோம்.

நின்
மனைவி, மக்கள்,
சகோதரர்கள்.

57, [illegible]யார் வீதி,
யாழ்ப்பாணம். [6434]

## நவாலி வாழ் மக்களுக்கு
# ஓர் நற்செய்தி!

உதயன் / சஞ்சீவி பத்திரிகைகளை நவாலியில் விற்பனை செய்வதற்குப் புதிய முகவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதிகாலையில் உதயன் / சஞ்சீவிப் பிரதிகளை கீழ்க் காணும் விலாசத்தில் அவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு. க. இ. பாலசுந்தரம்,**
மனோன்மணி ஸ்ரோர்ஸ்
நவாலி,
மானிப்பாய்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சி. செல்வராஜா**

தோற்றம்: 1928 - 07 - 02
மறைவு: 1985 - 08 - 28

அன்பினைச் சுமந்த நின்
நெஞ்சு உறங்கின!
அமுதம் பொழிந்த நின்
அருள் விழி மூடின!
அன்புத் தந்தையே!
இனிமைக் காவலனே!
ஏன்? எமை துயரக் கடலில்
இறக்கி நீ ஏகினாய்!

இங்ஙனம்
மனைவி, மக்கள்.

167/8, கோயில் வீதி,
நல்லூர். (6440)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி**
**சௌபாக்கியவதி குணரட்ணம்**

சென்ற ஆண்டு 28-8-1987 ஆவணி சதுர்த்தியில் சிவபதமடைந்த எமது அன்புத் தயார் திருமதி சௌபாக்கியவதி குணரட்ணம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி வைபவம் 15-9 88இல் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து அவர்களின் ஆத்ம சாந்திக்காக எம்முடன் கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவஞானப்பிள்ளையார் வீதி,
ஆடியபாத ரோட், நல்லூர். (6441)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அஞ்சல் தொலைச் சேவையாளர் சம்பளம்:

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு யாழ். கிளை காலக்கெடு

காங்கேசன்துறை, செப் 14

அஞ்சல் தொலைச் சேவையாளர்களின் சம்பள முரண்பாட்டை 31-10-88க்கு முன் அரசு தீர்த்து வைக்காவிட்டால் 1-11-88 முதல் தொழிற் சங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இப்படியான தீர்மானம் ஒன்றை அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்க யாழ் கிளை நிறைவேற்றியுள்ளது.

மேற்படி சங்கக் கூட்டம் யாழ்-வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் தெல்லிப்பளை தபால் அதிபர் திரு. வி. ச. இராசையா தலைமையில் நடைபெற்ற சமயம் இப்படித் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் திரு. கா. கனகசுந்தரம், கிழக்கு மாகாண அஞ்சல் அத்தியட்சகர் திரு. எஸ். எம். எஸ், சேதுகாவலர், முன்னாள் தாய்ச் சங்க பொருளாளர் திரு. எம். குணசேகரம் முன்னாள் வட மாகாண அத்தியட்சகர் திரு. ஏ. சி. கந்தசாமி ஆகியோர் கலந்து உரையாடினார்கள்.

சங்கத்தின் புதிய தலைவராக வி. எஸ். இராசையாவும், செயலாளராக எஸ். வைத்திலிங்கமும் 10 பேர் அடங்கிய செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ - 68)

டாக்டர்கள் பற்றுக்குறை

# யாழ். ஆஸ்பத்திரியில் ஒரு நாளில் 400 பேரே பார்வையிடப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், செப் 14

யாழ். பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை அளிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் மட்டுமே வார்ட்டில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள டாக்டர்கள், தாதிகள் பற்றுக்குறை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

காலையில் இருநூறு நோயாளர்களும், மாலையில் இருநூறு நோயாளர்களுமே தற்போழுது வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சைக்காகப் பார்க்கப்படுகின்றனர்.

அதனால் நோயாளர்கள் வெகு நேர காலத்துடன் வந்து நம்பர் எடுத்து டாக்டர் வரும் வரை காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

நேரம் பிந்தி வருபவர்கள் நம்பர் இல்லாததன் காரணமாக திரும்பிப் போகவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தமது சொந்த ஊர்களில் இருக்கும் வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களைச் செல்லுமாறும் அங்கு குணப்படுத்த முடியாத நோய்க்கு ஆளானவர்கள் மட்டுமே பெரியாஸ்பத்திரிக்கு வரவேண்டும் எனவும் ஏற்கனவே ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அறிவுறுத்தி உள்ளது தெரிந்ததே. (ஒ-10)

## ஊரடங்கு நீக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 14

வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக முல்லைத் தீவுப் பகுதியில் தொடர்ச்சியான ஊரடங்கு காரணமாக அப்பகுதி மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே இந்திய அரசும் பாதுகாப்புப் படைகளும் இது விடயத்தில் கவனமெடுத்து ஊரடங்கு உத்தரவை உடனடியாக நீக்கி இந்தப்பகுதியில் தங்கு தடையின்றி உணவு விநியோகம்மேற்கொள்ள ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு பிரசைகள் குழுவின் இணைப்புக்குழு அமைதிப்படையுடன் தொடர்பு கொண்டு மேற் கண்டவாறு கோரிக்கை விடுக்கவுள்ளது.

இதற்கான தீர்மானமொன்று ஞாயிற்றுக் கிழமை 11 ஆம் திகதி நடைபெற்ற பிரஸ்தாப குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. (இ-9)

# போட்டிப் பரீட்சைக்கு 236 அதிபர்கள் விண்ணப்பம்

பலாலி, செப்.14

தற்போது கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் கோரப்பட்ட முதலாம், இரண்டாம், மூன்றும் தர அதிபர் பதவிகளுக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாகவும், வடமராட்சி கோட்டக்கல்வி நிலையத்தின் ஊடாகவும் 236 அதிபர்களும், அதிபர் கடமை புரிபவர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

முதலாம், இரண்டாந் தர அதிபர்பதவிகளுக்கு யாழ்.கல்வித் திணைக்களத்தில் இருந்து178விண்ணப்பங்களும், மூன்றுந் தர அதிபர் பதவிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் இருந்து 13 விண்ணப்பங்களும், வடமராட்சிக் கோட்டக்கல்வி நிலையத்தில் இருந்துமுதலாம்,இரண்டாம், மூன்றும்தர அதிபர் பதவிகளுக்கு45விண்ணப்பங்களும் பரீட்சைஆணையாளருக்கு விண்ணப்பமுடிவுத் திகதியாகிய செப்டம்பர் 6ஆம் திகதியும், அதற்கு முன்னரும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இவற்றைவிட யாழ். மாவட்டத்தில் மட்டும் எண்ணூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தமது பாடசாலை அதிபர்கள் மூலம்மேற்படிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் அநேகபாடசாலைகள் தற்காலிக அதிபர்களினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், பல கொத்தணிப் பாடசாலைகளும் தற்காலிகக் கொத்தணி அதிபர்களினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதனால் நடந்து முடிந்த கல்வி நிர்வாக சேவைப்பரீட்சை மூலமும்-நடக்கவுள்ள அதிபர் தெரிவுப்பரீட்சை மூலமுமே இவ்வெற்றிடங்கள் நிரப்பப் படவுள்ளதாகக் கல்வி அமைச்சின்உயரதிகாரி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-119)

## வீதியைத் திருத்த நடவடிக்கை

மானிப்பாய், செப்.14

கடந்த பல வருடங்களுக்குப் பின்னர் உடுவில் டச்சு வீதித்திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வீதியைத்திருத்தித் தார் போடுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ-90)

## பிரசைகள் குழு ஏற்பாடு

யாழ்ப்பாணம் செப். 11

தியாகி திலீபனின் நினைவு காலத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு பிரசைகள் குழுவின் இணைப்புக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ள அகிம்சைத் தினங்களான 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான காலப் பகுதியை அகிம்சை வழியில் கழிக்க வட்டுக் கோட்டை பிரசைகள் குழு ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதல் கட்டமாக எதிர்வரும் 15ஆம் திகதி காலை 8 மணி முதல் சித்தன்கேணி பிள்ளையார் கோயில் முன்றலில் உண்ணாவிரதம் ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளது. (இ-9)

# நிரந்தர இடம் இன்றி கோப்பாய் கமநல சேவை நிலைய ஊழியர்கள் அவதி

கோப்பாய், செப் 14

கோப்பாய் கமநல சேவை நிலையம் இயங்குவதற்கு நிரந்தர இடம் இல்லாததால் பெரும் கஷ்டமான நிலை இருந்து வருகிறது.

இந்த அலுவலகம் அமைந்திருந்த கட்டடம், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இயங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கமநல சேவை நிலைய ஊழியர்கள் புதிதாக அலுவலகம் அமைக்க கட்டடம் ஒன்றைத் தேடி வருகின்றனர்.

தற்பொழுது அவர்கள் தற்காலிக இடமொன்றில் கடமை ஆற்றுகின்றனர். (இ-72)

## பிரசைகள் குழு அங்குரார்ப்பணம்

அடம்பன், செப். 14

மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ''பிரசைகள் குழு'' அடம்பன் மகா வித்தியாலயத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது. (ஐ)

## பாடசாலைசுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.14

யாழ்மாவட்டத்திலுள்ள சுகாதாரப் பரிசோதகர்களுக்குஒருவார கால பாடசாலைச் சுகாதார பயிற்சிக் கருத்தரங்கு கொழும்பு தாய் சேய் நலக்காரியாலயத்தில் இம்மாதம்நடைபெறுகிறது.

பாடசாலைச் சிறுவர்களின் சுகாதாரக் குறைபாடுகளை நீக்க மேற்படி கருத்தரங்கு வகைசெய்யும். (இ-18)

## வேண்டுகோள்

கரவெட்டிப் பகுதிக்கு நிரந்தர பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் அவசியம் தேவையென துன்னாலை தெற்கு தயாநிதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. செல்லையா ஜே. பி. யாழ். அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-118)

## அமைதிப்படை ஏற்பாட்டில் நடந்த கூட்டம்

காரைநகர் செப் 14

காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்றை அமைதிப்படையினர் நடத்தினர்.

இதில்வட்டுக்கோட்டை அமைதிப்படை அதிகாரி பேசுகையில் 'ஆசிரியர்கள் கற்பித்தலில் நடுநிலைமைவகித்து நடந்து கொள்ளுதல் அவசியம்' என்றுகூறினார். (இ-73)


RADIO, T.V & DECK

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

உங்கள் பதிவுகட்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane
Hospital Road,
Jaffna.

(C/180)

SCIENCE ACADEMY - JAFFNA

(B. M. Cக்கு முன்பாக) வெலிங்டன் சந்தி

DAY CLASS பிரிவு II ஆரம்பம்: 14 - 9 - 88 புதன்

திங்./புதன்/வெள்ளி 1-00 p.m. பொறியியல் — சோதிலிங்கம் B.Sc.
திங்./புதன்/வெள்ளி 2-00 p.m. ஒளியியல் — சோதிலிங்கம் B.Sc.
செவ்./வியா. 1-00 p.m அசேதன இரசாயனம் — சண் B.Sc.
செவ்./வியா. 2-30 p.m மூட்டிய கோல் — வெக்டர் B.Sc.
செவ்./வியா. 3-30 p.m. கணத்தாக்கு உந்தம் — வேலாயுதம் B.Sc.
4-30 p.m. வட்டம் — வெக்டர் வேலாயுதம்

(6471)

உ
சிவமயம்

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 30ஆம் நாள் (15-9-88) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணி முதல் 1.15 மணி வரை தனு இலக்கினத்தில் வரும் சுபவேளையில்

திருநிறை செல்வன் மோகனதாஸ் (சுகாதாரத் திணைக்களம்) அவர்களுக்கும்

திருநிறை செல்வி இராஜினி அவர்களுக்கும்

இறைவன் துணைகொண்டு மணமகளில்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி நா. இரத்தினம்
முத்துக்கிருஷ்ணர் ஒழுங்கை,
சுன்னாகம்.

திரு. வை. நவராசா
(ஓய்வு பெற்ற அஞ்சலதிபர்)
மிதிலை
குமாரசாமிப் புலவர் வீதி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(C 57)

உ

திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 29 ஆம் நாள் (14 - 09 - 1988) புதன்கிழமை (இன்று) பகல் 10-27 — 12-03 மணியளவில் வரும் சுப வேளையில்

★ பிரோசா ரேடர் ★

என்னும் ஸ்தாபனத்தை சாவகச்சேரி நகரசபை ஆணையாளர்

திரு. த. நவரத்தினராசா

அவர்கள் திறந்து வைப்பார். அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் சமுகம் தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

பிரோசா ரேடர்
உரிமையாளர்கள்.

இல 31, கண்டி வீதி,
சாவகச்சேரி.

[6426]

உ

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ ஆண்டு ஆவணித் திங்கள் 31 ஆம் நாள் (16 - 9 - 88) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.00 மணிரை அமைந்த சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறைச் செல்வன் கணேசலிங்கம் (பிறவுண் அன்கோலிமிட்-கொழும்பு) அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறைச் செல்வி ரதி அவர்களுக்கும்

நல்லூர் சிவன் சந்நிதானத்தில், திருமணம் செய்துகொள்ள நாம் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இருவீட்டார் அழைப்பு:

திரு. திருமதி
சி. கிருஷ்ணசாமி
16, 2-ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
திருச்செல்வம்
''சியாமள வாசம்''
புளியங்கூடல்
ஊர்காவற்றுறை.

(6480)

★ ASANGA ENTERPRISES ★ அசங்கா என்ரபிறைஸர்ஸ்

A. வாசன்

★ கனடா
குறுகிய காலத்துக்குள் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.

★ சவூதி அரேபியா
மேசன் 500 SR
கம்பி வளைப்போர் 500 SR
சுப்ப மாக்கற் சேல்ஸ் மென் 400 SR
கூலியாட்கள் 450 SR
வீட்டுச் சாரதி 450 SR

★ குவைத்
கிளீனேர்ஸ் 35 KD

★ சிங்கப்பூர்

சிங்கப்பூரில் உடனடி வேலை வாய்ப்புக்கள்

சிங்கப்பூரில் உள்ள Chinese Ship Yard Companyக்கு தொழிலாளர் உடன் தேவை. சம்பளம் 375 S. Dollor. தங்குமிடம் இலவசம். 6 படத்துடன் All Countries Passport Photostat 2 பிரதி உடன் தொடர்பு கொள்ளவும், முற்பணம் அறவிடப்படமாட்டாது.
சிங்கப்பூரில் கண்ணியமான குடும்பத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவுடைய பணிப்பெண்கள் தேவை. சம்பளம் 225 S. Dollor. உணவு இருப்பிட வசதி இலவசம்.

32, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(பிலிப்ஸ் நேசிங் ஹோமுக்கு அருகே)

(C-168)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ENGLISH TEACHERS'
TRAINING ENTRANCE
EXAM.
15, TWO HOUR PRACTICE CLASSES
BY
## S. B. IYAR
**Commences on 17-9-88**
SAT, SUN ONLY
Time: 12.30 — 2.30 p.m.

**12, Wyman Road,
Nallur.**

(6406)



# NEW MASTER
## INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.

# 89 A/L
# DAY CLASSES

ஆரம்பம் 14-09-88
புதன் காலை 7-30 மணி

ZOOLOGY 7-30 — 8-30 a.m.
CHEMISTRY 8-30 — 9-30 a.m.
PHYSICS 9-30 — 10-30 a.m.
BOTANY 10-30 — 11-30 a.m.
PURE & APPLIED } MATHS 10-30 — 12-30 p.m.

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
★ கடந்த ஆண்டுகளில் முழுப்பாடத் திட்டமும் குறித்த காலத்தில் முடித்த ஒரேகல்வி நிறுவனம். ★ (C-117)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



**அமரர் உயர்திரு. அம்பலப்பிள்ளை
சின்னத்தம்பி அவர்கள்**
(மாவிட்டபுரம் எல். பி. செம்கவுஸ் வாளித் தொழிற்சாலை அதிபர்)

மலர்வு: 17- 3- 1898
உதிர்வு 14- 9- 1987
(14- 9- 1988)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்து வந்தவரும் மாவிட்டபுரத்தில் எல். பி. செம் வாளித் தொழிற்சாலையினை நிறுவியவருமாகிய அமரர் அ. சின்னத்தம்பி அவர்கள் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காக விளங்கி எம்முடன் அன்பாய், பண்பாய், பாசமாய் இருந்து எல்லோரிடமும் இனியவராய் பாரினில் யாவரும் போற்றிட வாழ் வாங்கு வாழ்ந்த, ஐயா அவர்களின் ஆத்மா சாந்தி அடைந்து இன்றுடன் ஓராண்டுகள் கழிகின்ற வேளையிலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகச் சுடர் விட்டுக்கொண்டே இருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மகள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
தொழிற்சாலை ஊழியர்கள்.

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
(6423)

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில்

# காயம் அடைவோர் சிகிச்சை பெறும் வார்ட் மூடப்பட்டதற்கு ஆட்சேபம்

கிளிநொச்சி, செப். 14

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் உள்ள காயப்பட்டோர் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சிகிச்சைக்கான வார்ட் மூடப்பட்டது மிக மனிதாபிமானமற்ற செயல்.

கிளிநொச்சியிலுள்ள பொது ஸ்தாபனங்களும் பொதுமக்களும் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட மக்களில் 90 வீதமான வர்கள் ஏழைகள். ஏனைய மாவட்ட மக்களைப் போன்று வசதி படைத்தவர்கள் அல்லர். இங்கு கூடுதலானவர்கள் மலையக சமூகத்தைச் சேர்ந்த கூலிகள், அகதிகளாகக் குடியேறிய மக்கள். இவர்கள் அனைவரதும் உயிர்காக்கும் நிலையம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையே,

இவ்வைத்தியசாலையின் காயவார்ட் கடந்த முதலாம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது சகலருக்கும் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளது.

இவ்வைத்தியசாலையின் முன்னேற்றம் கருதி ஒக்ஸ்பாம் நிறுவனம், கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், பிரசைகள்குழு உட்பட பல நிறுவனங்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும், உபகரணங்களையும் வழங்கி உள்ளன.

தற்போது தண்ணீர்த் தட்டுப்பாட்டைக் கருத்தில்கொண்டு ஒக்ஸ்பாம் நிறுவனம் பாரிய இரண்டு தண்ணீர்க் கொள்கலன்களைக் கொழும்பிலிருந்துதருவித்துள்ளது.

வேறுபல பொதுஸ்தாபனங்கள் கிளிநொச்சியிலுள்ள நீர்வழங்கல் திட்டத்தைத் துரிதப்படுத்தி வைத்தியசாலைக்காவது உடனடி நீர்வழங்க ஆவன செய்யுமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் உட்பட ஏனையஉயர் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

கிளிநொச்சி இலங்கை இராணுவம் பவுசர் மூலம் நீர் விநியோகித்து வருகிறது. (இ-76)

மக்கள் முகம்

### குத்தகையாளர் சங்கம்

குருநகர், செப். 14

மீன் சந்தைப் படுத்தும் குத்தகையாளர் சங்கப் பொதுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

கீழ்க்கண்டோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர்; திரு. செயேசுதாஸன்(சவுந்தரம்) உப தலைவர்; திரு.ம. துரைராசா, செயளலார்; திரு,வி.இ. ரஞ்சித், உப செயலாளர் திரு. என், எம். பத்திநாதர், பொருளாளர் திரு. ஈ எல். எஸ். மரியாம்பிள்ளை.

எட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது, (இ-51:

# யாழ் லயன்ஸ் கழகம் இலவச பற் சிகிச்சை

யாழ்ப்பாணம், செப்.14

யாழ் லயன்ஸ் கழக அநுசரணையின் கீழ் 13 வயதுக்குட்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இலவச பற்சிகிச்சை நடைபெறும்.

இச் சிகிச்சை பல் வைத்தியர் லயன் கே. நித்தியானந்தனால் 163/1 மின்சார நிலைய வீதியிலும் (யாழ் பஸ் நிலையத்துக்கு முன்பாக) நியூ புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸுக்கு அருகாமையிலும் நடத்தப்படும். (இ- ச)

### இராமநாதன் வித்தியாலயம் முதலிடம்

தாவடி, செப். 14

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட வேதாகம வினா விடைப் போட்டியில், 20வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றது. (இ-144)

### சைக்கிளில் ரோந்து

கோப்பாய், செப். 14

கோப்பாய் வடக்குப் பகுதிகளில் அமைதிப் படையினர் சிவில்உடையில் சாதாரண பொது மக்களைப் போன்று சைக்கிள்களில் ரோந்து சுற்றி வருகின்றனர்.(இ-72)


புதிய உயர் கல்லூரி
# G. A. Q. Ist in com.
## 90 ஆம் ஆண்டு
✶ மேற் கூறப்பட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் 03 - 09 - 88ல் இருந்து ஏற்றுக கொள்ளப்படுகின்றன.
✶ இதற்கான பல்கலைக்கழக பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம். விபரங்களை நேரிலும் தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.
✶ தற்போது நியமனம் பெற்ற ஆரம்ப ஆசிரியர்களின் நலன்கருதி விரிவுரைகள் 18.9.88 ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு:-
**S. அருள்நங்கை**
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
கிளை
புதிய உயர்கல்லூரி,
மல்லாகம்.
(C/170)



## கம்பியூட்டர் விரிவுரைகள்
# BASIC
with Practical
in world famous
Commodore Computers
4- Months
ஆரம்பம்: 21- 9- 88
Fees மாதம் 250/- மட்டுமே
சான்றிதழ் உண்டு
# SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Education)
16, 3 ஆம் குறுக்கு வீதி,
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
(C/182)


## உங்களைப் பிரிந்து ஓராண்டு



தாயின் மடியில்:
9 - 07 - 1925

இறைவனடியில்:
27 - 08 - 1987

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்,
சுண்டிக்குளியை இருப்பிடமாகவும் கொண்ட

**திரு. வைத்திலிங்கம் இராசசுந்தரம்
(இராஜா)**
(Retired Station Master)

தங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மாமி, மனைவி, மக்கள்,
பெருமக்கள், சகோதரர்கள், மருமக்கள்,
மைத்துனர்கள், மைத்துனி.

10, மூளாய் லேன்,
சுண்டிக்குளி.
(6454)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### கேள்வி அறிவித்தல் - 1988

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் கட்டடங்கள், சந்தைக் கடைகள் ஆகியவற்றை குத்தகைக்குக் கொடுக்கும் பொருட்டான அரக்கு முத்திரையிடப்பட்ட தனித்தனி சேள்விகள் 30-09-88ஆந் திகதி நண்பகல் 12 மணிவரை வலிகாமம் தெற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 28-09-88ஆந்திகதி நண்பகல் 12-00 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 30-09-88 ஆந் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில், 'விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்' என விலாசமிடப்பட்டு போடப்படுதல் வேண்டும். இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என விலாசமிட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் என்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதியிலும், நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் யாவும் 30-09-1988 பி. ப. 12-30 மணிக்குத் திறக்கப்படும். இச்சமயத்தில் கேள்விக்காரர்கள் அனைவரும் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவார்கள். சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்வியையோ அல்லது அதன் பகுதியையோ ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்குப் பூரண அதிகாரமுண்டு.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைய குத்தகை எடுத்து நடத்துதல் வேண்டும் நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு.

மேலதிக விபரங்கள் அறிய விரும்பின் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அலுவலகத்தில் அல்லது சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் சாதாரணவேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 0 09-1988.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

### குத்தகை விபரம்

வலி-தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் உப அலுவலகம்

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிகமாகச் செலுத்த வேண்டிய மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 01. சுன்னாகம்-யாழ்ப்பாணம் வீதியில் மக்கள் வங்கிக்குத் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள மேல்மாடிக் கட்டடம் | 100/- | 1000/- | 1000/- | 75,000 |

வலி தெற்கு பிரதேச சபை, உடுவில் உப அலுவலகம்

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிகமாகச் செலுத்த வேண்டிய மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 01. இணுவில் சந்தையில் அமைந்துள்ள சந்தைக் கடை இல. 01 | 100/- | 160/- | 1000/- | 50,000/- |
| 02. மேற்படி கடை இல. 02 | 100/- | 160/- | 1000/- | 50,000/- |

(C/186)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**உயர்திரு. செல்லையா கனகசபை**
(தொழிலதிபர்)

மலர்வு: 24 - 07 - 39
உதிர்வு: 15 - 08 - 88

உறவினர்யாம் ஆறுகின்ற
உறைவிடம் ஆனவரே
உம் தெய்வப் பணிகள்கண்டு
உளம்துளிர்க்கு திங்கே
செய்யும் தொழிலே
உயர் தெய்வமென்றெண்ணிய நீர்
செய்த சிறப்பைக் கண்டால்
மெய் சிலிர்க்கு மன்றோ!
அன்பும் பண்பும் ஆனந்தநின்
வாழ்வும் கண்டால்
என்பும் உருகிட
இதயமும் குமுறி யலைகிறதே
இறைவன் திருவடி நிழலில்
இணைந்தென்றும் நீர் நிறையும்
பேரின்ப வாழ்வெய்தப்பிரார்த்திக்குவமே!

14 - 09 - 88 புதன்கிழமை மட்டுவில் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமாறு அன்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்
மனைவி, மக்கள், சகோதரர்,
மாமன், மைத்துனர்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(6422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை.

**பொருள்:**

தன் கைப்பொருள் ஒன்று தன்னிடம் இருக்க அதைக் கொண்டு ஒருவன் செயல் செய்தல், மலையின் மேல் ஏறி யானைப் போரைக் கண்டாற் போன்றது.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

இல:– 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 32073
14-09 1988 க. பெ. இல 23


## வேண்டாத கைதுகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களில் ஒருவரான கிட்டுவும் அவரது சகபாடி ரஹீமும் மற்றும் பதின்மூன்று பேரும் திங்களன்று தமிழகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். கைது செய்யப்பட்டதற்குக் காரணம் தெரிவிக்கப்படவில்லை.

இதற்கு முன்னர் கடந்த ஆகஸ்ட் எட்டாம் திகதி தமிழகத்தில் வைத்து 154 தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு மாதத்துக்கு மேலாகியும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போராளிகளைத் தேடி அழிப்பதும், ஆயுதங்களைக் களைவதும் இந்திய அமைதிப்படையின் பிரதான நடவடிக்கையாக இருக்கிறது அந்த நடவடிக்கைகளின் போது பொதுமக்களும் பல விதங்களிலும் பாதிக்கப்படுகிறார்கள்— பல சந்தர்ப்பங்களில் துன்புறுத்தப்படவும் செய்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் நடக்கும் தேடுதல். சுற்றிவளைப்பு. கைது என்பன ஆயுதங்களைக் களைவது சம்பந்தப்பட்டவை எனக் கூறப்படுகிறது. ஆயுதக் களைவு ஒப்பந்தத்தின் மூலம் சுமத்தப்பட்ட கடமையென்று சொல்லப்படுகிறது

ஆனால் சென்னையில் ஈழத்துப் போராளிகள் கைது செய்யப்படுவது எதற்காக? அண்மையில் சார்க் நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தடுப்பு ஒப்பந்தத்தின் கீழான கடமையை நிறைவேற்றவா? அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இப்படி ஒரு நெருக்கடியைக் கொடுத்தால் அவர்களை வழிக்குக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்திலா?

இதற்கான காரணத்தை இந்தியா இப்போதைக்கு வெளியிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

எப்படியோ, ஈழத்தமிழ்ப் போராளிகள் தமிழகத்தில் வைத்துக் கைது செய்யப்படுவதை இங்குள்ள தமிழ் மக்கள் ஒரு வேண்டாத செயல் என்றே கண்டிக்கிறார்கள் பலவந்தத்துக்கு முன்னேற்பாடு என நினைக்கிறார்கள். இந்தியாவையும் விடுதலைப்புலிகளையும் நெருங்கி வரச் செய்வதற்குப் பதில் இடைவெளியைக் கூட்டுவதற்குச் செய்யப்படும் நடவடிக்கை என்று கருதுகிறார்கள்.

திரு. கிட்டு கைதானமை, வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்கும் செயலாகக் கருதப்படுகிறது.

வடக்கு, கிழக்கு இணைப்பு பிரகடனப் படுத்தப்பட்டிருப்பது, இதுவரை இருந்த ஸ்தம்பித நிலையில் ஒரு படி முன்னேற்றம் என்று கருதப்படும் வேளையில்—

இந்தத் தருணத்தில் இந்தியா, தனது விடாப்பிடியைத் தளர்த்தி, விடுதலைப் புலிகளுடனான உறவை நெருக்கமாக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கும் வேளையில்—

வருட முற்பகுதியில் இந்திய அதிகாரிகளுடன், விடுதலைப்புலிகள் தரப்பில் பிரதிநிதியாக இருந்து சென்னையில் பேச்சு நடத்திய திரு. கிட்டுவை—

கைது செய்திருப்பது இருதரப்பு உறவை மேன்மேலும் விரிசலாக்கச் செய்வதற்கான ஒரு திட்டமிட்ட செயல் என்று கருதுவதை விட வேறு அர்த்தம் கொடுக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் சேர்த்துக் தான் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற ஈழத்தமிழ் மக்களின் விருப்பத்துக்கு நேர் முரணான செயற்பாடாக அமைகிறது தமிழகத்தில் நடக்கும் கைதுகள்.

ஒரு வருடத்துக்கு மேலாகக் காலந்தாழ்த்தியபின்னர் தென்னிலங்கைச்சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கப் போவதாக இலங்கை ஜனாதிபதி உறுதி கூறி இருக்கும் இவ்வேளையில்— கிட்டு போன்ற தலைவர்களைத் தமிழகத்தில் கைதுசெய்வது முற்றிலும் பொருத்தமற்ற, வேண்டாத நடவடிக்கை ஆகும்

எனவே தமிழகத்தில் கைதான போராளிகளை இந்தியஅரசு உடனடியாக விடுவித்துத் தனது நல்லெண்ணத்தை நிரூபிப்பது அவசியம். இலட்சிய வேட்கை கொண்ட போராளிகளுடனான உறவை அவர்களது மனங்களை வெல்வதன் மூலம் வளர்க்கலாமே அன்றி நிர்ப்பந்தம், நெருக்குதல் மூலம் அல்ல.

இருபக்கங்களிலும் விட்டும், கொடுத்தும் சமரசம் காண்பது வேறு. அழுத்தம், பலவந்தம் செய்து சமரசம் காண நினைப்பது வேறு.

குர்டிஷ் இன மக்கள் மீது

# ஈராக்கின் ரசாயன ஆயுத தாக்குதல் பற்றி

# ஐ.நா. கமிஷன் விசாரிக்க வேண்டும்!

## பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஜேர்மனி வேண்டுகோள்

ஐ.நா. செப், 13

குர்டிஷ் இனமக்கள் மீது இரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்திய ஈராக்கின் செயல் பற்றி விசாரணை செய்ய சுதந்திர விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கும்படி ஐக்கிய நாடுகள்சபைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டன், அமெரிக்கா. மேற்குஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றன.

இரசாயனத் தாக்குதலால் பாதிக்கப்பட்டு துருக்கியில் தஞ்சமடைந்துள்ள குர்டிஷ் அகதிகளை நேரிற் சென்று இக்கமிஷன் பார்வையிட வேண்டும் என்றும் இந்த நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்தி உள்ளன.

இதனிடையில்— இரசாயன ஆயுதங்களை ஈராக் பாவித்ததை நிரூபிக்கும் ஆதாரங்கள் தனக்குக் கிடைத்திருப்பதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்திருக்கிறது.

ஏற்கனவே இரசாயனத் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து, அமெரிக்கா ஈராக்குக்கு பொருளாதார உதவிகள் வழங்கப்படுவதை நிறுத்தப் போவதாகத் தெரிவித்திருக்கிறது (எ)

## பிரதமர் காந்தி மீண்டும் தமிழகம் வருகிறார்

சென்னை செப் 13

பிரதமர் ராஜீவ்காந்தி மூன்று நாள் விஜயம் ஒன்றை தமிழகத்தில் அடுத்தமாதம் 2 3 4 ஆம் திகதிகளில் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டது

தமிழ்நாடு சட்டசபை கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்ட பின்னர் பிரதமர் மேற்கொள்ளும் 3 ஆவது விஜயம் இதுவாகும்.

இந்தியப் பணத்தில் 21 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட பாம்பன் பாலத்தையும் பிரதமர் இம் முறை திறந்து வைக்க இருக்கிறார்

இம் மாதம் 6 ஆம்திகதி பிரதமர் தமிழகம் வர இருந்தார் பின்னர் அப் பயணம் திடீரென ரத்துச் செய்யப்பட்டது. (எ)

## இடைக்கால அரசு யாஸிர் அரபாத் தகவல்

அபுதாபி, செப். 13

இஸ்ரவேலியர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பகுதிகளில் இடைக்கால அரசு ஒன்றை அமைக்கத் திட்டமிட்டிருப்பதாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட காஸா, மேற்குக்கரை ஆகிய அரபுப் பிரதேசங்களின் எதிர்காலம், இடைக்கால அரசு ஆகியன பற்றி விவாதிக்க பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தேசிய சபை அடுத்தமாதம் அல்ஜியர்ஸில் கூடவிருக்கிறது. (எ)

திருநாவுக்கரசு பேச்சு:

## எலிகள் அல்ல நாங்கள்; புலிகள் என்று காட்டுவோம்!

சிவகங்கை, செப் 13

எங்களைப் பார்த்து எலிகள் என்று ஜெயலலிதா கூறுகிறார். நாங்கள் எலிகள் அல்ல புலிகள் என்று காட்டுவோம் என்று முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு கூறினார்.

சிவகங்கையில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு பேசியதாவது:

சோதனையான காலத்தில் யார்பக்கத்தில் இருக்கின்றார்களோ அவர்கள்தான் உண்மையான நண்பர்கள். சிலர் பதவி இருக்கும்போது மட்டும் வந்து பலன் அடைந்து விட்டுச் சென்றுவிடுகின்றனர். இங்கு எம். ஜி ஆர் மீது பரிவும், பாசமும், அன்பும் உள்ள தொண்டர்கள் மட்டும் உள்ளனர். இன்னும் சிலர் வெளியே உள்ளனர் அவர்கள் காலப் போக்கில் வருவார்கள்.

ஜெயலலிதாவுடன் உள்ள பலருக்கு இன்னும் தாங்கள் தேசியக்கொடி கட்டிய காரில் அமைச்சராகப்போவது போலக் கனவு காண்கின்றனர். அவர்களுக்கு இது பகற் கனவு என்று தெரியாது அவர்களும் நம்மிடம் வருவார்கள்.

ஜெயலலிதா அரசியலுக்கு வந்ததில் இருந்தே அவருக்காகப் பல கஷ்டங்களை அனுபவித்துத் தியாகம்செய்த எங்களைப்போன்ற தலைவர்களை நம்பி வந்த கழகத் தொண்டர்கள் அவர் எம் ஜி. ஆரின் வாரிசு என்ற பொய்யை நம்பி விட்டார்கள்.

ஜெயலலிதா அரசியலுக்கு வந்து ஒருமாதம் ஒழுங்காகத்தான் இருந்தார். அதன் பின்பு தான் பைத்தியம் பிடித்துவிட்டது. அவர் யாரையும் கேட்காமலும் தன் இஷ்டப்படியும் இல்லாமல் நடராஜன் இஷ்டப்படி செயல்படத் தொடங்கினார் நாங்கள் ஜெயலலிதாவிற்கு வேண்டுமானால் மதிப்புத் தரலாம் ஆனால் அவர் வீட்டில் உள்ள தோட்டக்காரன். வேலைக்காரனுக்கு எல்லாம் மதிப்புத் தர முடியாது. அதற்கு பேசாமல் சன்னியாசிஆகி அரசியலைவிட்டே போய் விடலாம்.

ஜெயலலிதாவிற்கு கூட்டத்தில் தன்னைத் தவிர வேறு யாரையும் மக்களும், தொண்டர்களும் புகழ்ந்து கூறக் கூடாது என்பது நினைப்பு ஒரு தடவை சாத்தூர் ராமச்சந்திரனை குட்டி எம் ஜி. ஆர். என்று என்று ஒரு கூட்டத்தில் யாரோ கூறி விட்டார். அதற்கு அன்று மாலை என்னைப் பிடித்து அந்த அம்மா தாறுமாறாகப் பேசி கொன்று விட்டார். அந்த அம்மாவின் முதல் கூட்டம் மதுரையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நெடுஞ்செழியன் பேசினார். அங்கேயே அந்த அம்மா இனி கூட்டங்களுக்கு நெடுஞ்செழியன் வந்தால் நான் பேச மாட்டேன் என்று கூறிவிட்டார்.

நேற்று மாலை எங்களை எலி என்று வர்ணித்துள்ளார். ஆனால் நாங்கள் எலிகள் அல்ல புலிகள் தான் என்பது போகப் போகத் தெரியும் எந்த சக்தியாலும் எம் ஜி ஆர். ஆட்சி ஏற்படப் போவதைத் தடுக்க முடியாது என்று கூறியுள்ளார். அது உண்மை தான். மீண்டும் எம் ஜி. ஆர். ஆட்சி தான் இங்கு மலரப்போகிறது ஆனால் ஜெயலலிதாவை முதல்வர் ஆகவிடாமல் தடுக்கும் சக்தி எங்களுக்கு உண்டு

இவ்வாறு திருநாவுக்கரசு பேசினார். (எ-4)

## வெளியேற்று உத்தரவு

கியூபா நாட்டின் தூதரையும் அவரின் மூன்றாவது செயலாளரையும் நாட்டைவிட்டு வெளியேறும்படி பிரிட்டிஷ் அரசு நேற்று உத்தரவு இட்டது.

லண்டன் நகர வீதியில் துப்பாக்கியால் சுட்டு பரபரப்பு ஏற்படுத்திய சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கியூபா தூதர் கூறிய காரணங்களை ஏற்க முடியாதிருப்பதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

ஏற்கனவே பிரிட்டிஷ் அரசுவியட்னாம் தூதரக முதலாவது செயலரை நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது (எ)

வெளி உலகில்

வாக்குறுதிகளை இலங்கை அரசு காற்றில் பறக்கவிட்டு

# மீண்டும் குழப்பம் ஏற்பட்டால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து

## பி. பி. ஸி. க்கு அளித்தபேட்டியில் அமிர்தலிங்கம்

லண்டன். செப். 14

சிங்களத் தீவிரவாதிகளின் நெருக்கடிகளுக்குப் பணிந்து தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல. இந்திய அரசுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசு காற்றில் பறக்கவிட்டால் நாட்டில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டு இறுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும்

இப்படி திரு அமிர்தலிங்கம் பி. பி ஸிக்கு அளித்த பேட்டியில்தெரிவித்தார்.

தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் பி. பி ஸிக்கு அளித்த பேட்டியில் மற்றொரு கேள்வி— பதில்.

கேள்வி: மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடக்கும்போது அதில் தாங்கள் கலந்துகொள்ளப்போவது இல்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்திருக்கின்றார்களே. அவர்களால் கலந்துகொள்ளாத தேர்தல் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமா?

அமிர்: முதலில்போர் நிறுத்தம் ஏற்பட்டு தேர்தலில் கலந்துகொள்ளும் வாய்ப்புவிடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே எங்கள் ஆலோசனை. அப்படி நடந்தால் தேர்தலின் போது இரத்தக் களரி, குழப்பம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னர் நாங்கள் விடுதலைப் புலிகளுடனும் ஏனைய தமிழ்க் குழுக்களுடனும் கலந்துரையாடுவோம்.

வடக்கு-கிழக்கு இணைப்பு விடுதலைப் புலிகளின் கோரிக்கை மட்டுமல்ல, தமிழரின் தாயகப் பகுதிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதைத் தமிழர் விடுதலைக் கூட்டணியும் வலியுறுத்தி வந்துள்ளது. (இ-எ)

## பாலங்களைத் திருத்துமாறு மகஜர்

பருத்தித்துறை, செப். 14

அல்வாய் மாலிசந்திக்கு அண்மையில் குறை நிலையில் இருக்கும் இரு பாலங்களையும் திருத்திப் பொதுமக்களின் போக்குவரத்து வசதிகளைச் சீர்செய்து உதவுக.

மேற்கண்டவாறு வடமராட்சி தெற்கு, மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு இ. போ. ச. பஸ்பிரயாணிகள் சங்கம் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவரை அவசரமாகக்கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாக வடமராட்சி தெற்கு, மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவு இ. போ. ச. பஸ்பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு. எஸ். ரி. மார்க்கண்டு விடுத்துள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'அல்வாயில் மாலிசந்தி வியாபாரிமூலை வீதியில் முத்துமாரியம்பாள் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள பாலமும், அல்வாய் மாலிசந்தி விநாயகராலயத்துக்கு அருகாமையில் உள்ள வீதிப்பாலமும் குறை நிலையில் பூர்த்தியாகாமல் இருக்கின்றன.

இதனால் இப்பகுதிகளின் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இந்த இடங்களில் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

பலமாதங்களாக இவ்விரு பாலங்களும் கவனிப்பாரற்றுக் கிடப்பது மிகமிகக் கவலைக்குரியதாகும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-118)

## மண்டைதீவிலுள்ள சகல விவசாயிகளுக்கும் நஷ்டஈடு கோரி மகஜர்

மண்டைதீவு. செப் 14

மண்டைதீவிலுள்ள சகல விவசாயிகளுக்கும் அரசாங்கம் நஷ்டஈடு வழங்கவேண்டும்.

மேற்கண்டவாறு மண்டைதீவு விவசாயிகள் மகஜர் மூலம் யாழ் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளனர்.

மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மு சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் யாழ் அரசாங்க அதிபர் திரு. மு பஞ்சலிங்கத்தைச் சந்தித்து மகஜரைக் கையளித்தனர்.

மண்டைதீவுச் சந்தியில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளதால் விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு அஞ்சுகிறார்கள்.

இவ்வாறு மகஜரில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-88)

## சமய நிகழ்வுகளில்

### முருகண்டிப் பிள்ளையார் சங்காபிஷேகம்

ஒட்டுசுட்டான். செப் 14

முருகண்டி பிள்ளையார் கோவில் மகாசங்காபிஷேகம் 15ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

### உற்சவம்

வடமராட்சி செப். 14

வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கொடியேற்றத்தையொட்டி குடாநாட்டில் பல பகுதிகளிலிருந்தும் பஸ் சேவை நடத்தப்பட்டன. (ஒ-160)

### அனைவரும் சித்தி

மண்டைதீவு. செப் 14

வட இலங்கை சங்கீத சபையின் வருடாந்த செய்முறைப் பரீட்சைக்கு மண்டைதீவு மகாவித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவிகள் அனைவரும் சித்தி அடைந்தனர்.

இந்த வித்தியாலய சங்கீத ஆசிரியை சங்கீதரத்தினம் திருமதி சிறிறங்கராணி இராமச்சந்திரன் என்பது குறிப்பிடத்தக்கது (இ- 88)

## நல்லூர்கைலாசபிள்ளையார் மகா குர்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப் 14

நல்லூர் அருள் மிகு ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நாளை 15-9-88 வியாழக்கிழமை காலை 6 15 மணிக்கும் 8 00 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில் நடைபெறும்.

காலை 6 15 மணிக்கு மேல் சகல ஸ்தூபி அபிஷேகம். அதைத் தொடர்ந்து தம்பாபிஷேகத்தின் பின்பு தசதர்சனம், ஆச்சார்ய சம்பாவனை, மஹா அபிஷேகம் நடைபெறும்

அதையடுத்து ஸ்ரீ விநாயகப் பெருமான், கைலாசநாதர் திருவீதியுலாக் காட்சியும் இடம் பெறும்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள் மண்டலாபிஷேகம் நிகழும். (அ)

### இலட்சார்ச்சனை விழா

சாவகச்சேரி, செப் 14

சாவகச்சேரி அமிர்தபாஷிணிசமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் கோவில் இலட்சார்ச்சனை விழா ஆரம்பமாகி உள்ளது

15 ஆம் திகதி வியாழக்கிழமை கும்பாபிஷேக தின மணவாளக் கோலவைபவமாக (1009) நவோத்திர சஹஸ்ர சங்காபிஷேகமும் இரவு இலட்சார்ச்சனை பூர்த்தியும் எம்பெருமான் திருவீதி உலாக் காட்சியும் இடம்பெறும் (இ-31)

### சங்காபிஷேகம்

காங்கேசன்துறை செப் 14

வீமன்காமம் வீணிபவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை வருஷாபிஷேகமும் சங்காபிஷேகமும் நடைபெற இருக்கிறது.

மேற்படி ஆலயத்தில் கும்பாபிஷேக தினமான இன்று சங்காபிஷேகமும். விஷேச உற்சவமும் நடைபெறும். (இ-68)

### பஞ்சகுண்ட பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

காங்கேசன்துறைசெப் 14

காங்கேசன்துறை கிழக்கு தையிட்டி ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இன்று 14 ஆம் திகதி பஞ்சகுண்ட பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

### ஆவணிசதுர்த்தி

கொடிகாமம். செப் 14

கச்சாய், மருதடிப் பிள்ளையார் கோயில், கச்சாய் இலுப்பையடிப் பிள்ளையார் கோயில் என்பவற்றில் நாளை 15 ஆம் திகதி வியாழக்கிழமை ஆவணிச்சதுர்த்தியை ஒட்டி விசேஷ பூஜை வழிபாடு மேற்கொள்ளப்படவுள்ளது (இ-75)

### சனசமூகநிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், செப் 14

செல்வா சனசமூக நிலையத்தின் 2 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை செல்வா வீதியில் சனசமூக நிலைய முன்றலில் திரு. மு. யோகேந்திரன் தலைமையில் நடைபெற்றது

அன்றைய தினம் நிலையக் கொடி ஏற்று வைபவத்துடன் ஆரம்பிக்க விழா நிகழ்ச்சியாக மரம் நடும் வைபவத்துடன் நிறைவெய்தியது.

செல்வா சனசமூக நிலையப்பணிகளைப் பாராட்டி பலர் சிறப்புரையாற்றினர். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகடிவ் [PROCESSING]செய்தல் இலவசம்
• சிறந்த வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

14 09 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பண்டத்தரிப்பில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பது நியாயமான செயல் அல்ல. எனவே அனைவரையும் கடைகளைத் திறக்க அனுமதிக்கும்படி அவர்கள் கோரினர்.

விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அவை முற்றுப்பெற்ற பின்பே பிரஸ்தாப கடைகளைத் திறக்க அனுமதிக்க முடியும் என அமைதிப்படைஅதிகாரி திட்ட வட்டமாகக் கூறிவிட்டாராம்.

இதனை அடுத்து திறக்கப்பட்ட கடைகள் அனைத்தும் மீண்டும் மூடப்பட்டன. முற்பகல் 11-00 மணிக்கு இரண்டாவதுமுறையாக கூடிய வர்த்தகர் சங்கத்தினர் திறக்க அனுமதிக்கப்படாத கடைகளின் விசாரணைகள் முடிவுற்ற பின்னரே கடைகளைத் திறப்பது என்றும், அதுவரை எல்லாக் கடைகளையும் பூட்டுவது எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது

ஆனால் அமைதிப்படையினரின் வேண்டுகோளை மீறினால் விபரீதங்கள் ஏற்படலாம் என்றும் சிலர் கருத்து தெரிவித்தனராம்.

நண்பகல் 1.30 மணி வரை கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது ஆயினும் முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை (ஓ-120-9)

## பதுளையில் . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மாணவன் குலரத்தின உயிரிழந்தான்.

எனினும் பொலீஸார் இச்சம்பவம் குறித்து வேறு விதமாகக் கூறியுள்ளனர்.

பொலீஸார் மீது மாணவர்கள் தாக்குதல் நடத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர், (ஓ-எ)

## நாடு கடத்துவதை. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனுவில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

குறைந்த பட்சம் நடப்புக் கல்வியாண்டு வரையாவது தங்களை முகாமில் தங்க அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

எதிர் மனுவில், மனுத்தாரரர் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் அவர்கள் வசம் பயணத்துக்கான இலங்கை அவசரகாலச் சான்றிதழ்கள் உள்ளன. வெளியேற்றச் சொல்லும்போது வெளியேறி விட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அவர்களுக்கு இங்கு இடமளிக்கப்பட்டது. ஏனைய இலங்கையர்களைப் போல இவர்களும் தம் நாடு திரும்பியிருக்கவேண்டும். ஆனால் இவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆகஸ்ட் 18 ஆம் திகதி வரை இவர்களுக்கு அவகாசம் தரப்பட்டது எனவே அவர்கள் இனியும் இங்கு தொடர்ந்து தங்க உரிமை கிடையாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-4)

## 12 நாட்களும் கறுப்புப்பட்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மலை உரையில் குறிப்பிட்டது போன்று, தனது போராட்ட வடிவத்தினை மாற்றினார். ஆனால் ஆங்கிலேயருக்கு விளங்கிய காந்தியப் போராட்டத்தின் முக்கியத்துவம் இந்தியாவிற்கு விளங்காமற் போய்விட்டதே.

திலீபனின் மரணத் தறுவாயில் அவனது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதிமொழி வழங்கிய இந்தியா, திலீபன் மறைந்து ஒரு வருடமாகியும் அவற்றை நிறைவேற்றாமல் இருப்பது ஏன்?

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தினைக் காரணம் காட்டி அக்கோரிக்கைகளை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து இந்திய விலக முடியாது, ஏனெனில் திலீபனின் கோரிக்கைகள் தமிழீழ மக்களின் கோரிக்கைகளாகும்

மாணவர்களின் சார்பில் திலீபன் முன்வைக்க கோரிக்கை தமிழீழக் கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் வெளியேற வேண்டும் என்பதாகும் ஆனால் இன்று பாடசாலைகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் வெளியேறவில்லை.

அத்துடன் தமிழீழத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் அருகில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளன. இதனால் மாணவர்கள் உளவியல் ரீதியாகவும் பலத்த பாதிப்புக்குள்ளாகின்றனர். சோதனை என்ற பெயரில் பலமணி நேரம் வீதிகளில் இருத்தப்படுகின்றனர். தாக்கப்படுகின்றனர். கைது செயல்ப்படுகின்றனர்,

இந்த வகையில் தொடர்ச்சியாக அடக்கப்படுவதற்கு எதிராகவே திலீபன் மரணித்தான். அவனின் கோரிக்கைகள் எவையுமே நிறைவேற்றப்படாத இவ்வேளையில் அவனது அதே கோரிக்கைகளை அவன் காட்டிய வழியில் போராடுவதே அவனுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

தமிழ் ஈழ மாணவர்களே!

உங்களை அரசியல் மயப்படுத்தி மாபெரும் போராட்டச் சக்தியாக மாற்றுவதற்காகவே திலீபன் தனது உயிரைக் கொடுத்தான், தனது மறைவின் பின் தமிழீழத்தில் மாபெரும் மக்கள் போராட்டம், மக்கள் புரட்சி வெடிக்கும் எனத் திலீபன் நம்பினான்.

திலீபன் தனது உயிரைக் கொடுத்து உயிரூட்டிய விடுதலைப் போராட்டத்தைச் சருக விடலாமா? திலீபனின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு நாம் போராடுவதே திலீபனுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்

அத்துடன் திலீபன் உண்ணாவிரதம் இருந்த பன்னிரண்டு நாட்களும் கறுப்புப் பட்டி அணியுமாறும் பிரஜைகள் குழுக்கள் நடாத்தும் உண்ணாவிரதத்தில் பங்கு பெறுமாறும் அனைத்து மாணவர்களையும் வேண்டுகிறோம்- என்று உள்ளது.

## போக்குவரத்து'..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திரும்பின.

கொழும்பிலிருந்து பஸ்கள் எதுவும் வரவில்லை.

### புளொட் ஹர்த்தால்

இதேவேளையில்நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப் புளொட் இயக்கத்தினர்அழைப்புவிடுத்திருந்தனர். தமது இயக்கப் போராளிகள் சிலரின் நினைவாகவே இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து வவுனியாப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. இதன்காரணமாக யாழ் நகரில்இருந்து வவுனியாவிற்கு பஸ்கள் சென்றனவாயினும்-அவைதிரும்பி வரவிலலை. (ஓ-9)

## விடுதலை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படுவது என்பவற்றின் மூலம் விடுதலைப்புலிகள்- இந்தியத் தரப்பு சமரசத்தைத் தடைப்படுத்துமே தவிர துரிதப்படுத்தும் என்று நான் கருதவில்லை.

யுத்த நிறுத்தம் வந்தாலும் கூட பேச்சுவார்த்தை செய்யாமல், அல்லது விடுதலைப் புலிகளை ஈடுபடுத்தக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்படாது விட்டால் சுமுக நிலை தோன்றுவது சாத்தியமில்லை என்றே நான் நினைக்கிறேன்.

தேர்தல்களை மையமாக வைத்து நடவடிக்கை எடுக்கப்படுவதிலும் பார்க்க தமிழ் மக்களின் பிரச்சினையை இலக்காக வைத்து அதற்கேற்ற அணுகுமுறைகள் கையாளப்படாவிட்டால், வேறு முறைகளில் எடுக்கப்படும் தீர்வுகள் தேர்தல்களுக்கு பாதகமாகவே அமையலாம் - என்றார். (ஓ-10)

## பெருமழை
### 34 பேர் மரணம்

பெங்களூர், செப்.14 பெங்களூரில் நேற்று முன்தினம் பெய்த பெருமழைகாரணமாக34பேர் உயிரிழந்தனர்.

ஒருநாள் இரவில் மட்டும் 174 மில்லி மீட்டர் மழை பெய்ததாக அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விக்ரர் எலிசபெத்

ஊர்காவற்றுறைகிழக்கைச்சேர்ந்த திருமதி விக்ரர் எலிசபெத் அவர்கள் 11 9 88 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி இராசையாவின் அன்புப்புதல்வியும், யாழ்ப்பாணம் மரியா ஹோட்டல் உரிமையாளர் அருளானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பெரியராஜ், காலஞ்சென்ற பியோறின், ராஜசேகரம், பத்திராஜ் (பிரான்ஸ்), ஜெயராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் டோல்டனின் அன்புச் சகோதரியும், யூலியாவின் மைத்துனியும், றேசாறி, மேரியசிந்தா, சியாமளா, ஆகியோரின் அன்பு மாமியாரும். நிக்சன்,சுரேன், நிருஷா, சொரூபா, தனுஸ், சுஜி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். நல்லடக்கம் 14 9 88 புதன்கிழமை காலை 9 00மணிக்கு ஊர்காவற்றுறை அந்தோனியார் சேமக்காலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
S. அருளானந்தம்
பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம். (6439)

### திரு. சுப்பிரமணியம் சின்னப்பு

(குழந்தை)

உரும்பராயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திரு. சு. சின்னப்பு அவர்கள் 13. 9. 88 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி அருமையரின் அன்பு மருமகனும், சி. பொன்னம்மாவின் பாசக் கணவரும், த. சத்தியவிமலாதேவி (விடுதி மேற்பார்வையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்) சி. சமரக்கொடி. காலஞ்சென்ற செல்வி சி. சற்குணராணி. காலஞ்சென்ற திரு. சி. சத்தியேஸ்வரன்,கு கமலேஸ்வரி சி.பிரேமநாதன் (கிளை முகாமையாளர், ப.நோ கூ.ச அச்சுவேலி) சி. அபூர்வசூரியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும். ச. தம்பித்துரை (கணக்காளர், டாவின் அன் கொம்பனி கொழும்பு) இ. சிவபாதம் (இ.போ.ச. பருத்தித்துறை), க. குகனேஸ்வரன் (கோல்டன் லக், இருபாலை), பி. மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும். வைகரி. தர்விகா, தீரஜன், நீரஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 14 9 88 இன்று அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10. 00 மணிக்கு வல்லைச் சந்தி முழக்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. பிரேமநாதன்
''திருத்தணிகை''
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (6437)

## தகனக்கிரியை அறிவித்தல்

### திரு. செல்லையா கந்தசாமி

கடந்த 13-9-88 உதயனில் வெளியான மரண அறிவித்தலின் பிரகாரம் 11-9-88 இல் காலமான கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. செல்லையா கந்தசாமியின் ஈமக்கிரியைகள் 14-9-88 இல் நடைபெறமாட்டாது.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 15-9-88 வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்
இல. 45, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(6443)

## க. இராமசாமிப்பிள்ளை [K.R.]

நயினாதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட பிரபல வர்த்தகர் க. இராமசாமிப்பிள்ளை அவர்கள் 12 09-88 திங்கட்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வீரவாகுவின் அன்புச் சகோதரரும், கொழும்பு சிவரஞ்சினி ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும், கொழும்பு திவ்விய ஜீவனசங் ப்போஷகரும், கொடைவள்ளலும், கொழும்பு K R.N இலக்கம், 75,5 ஆம் குறுக்குத் தெரு நடராஜா, சுந்தரேஸ்வரி, ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர் தியாகராசா, வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபை செல்வராசா, நில அளவையாளர் இரத்தினராசா, காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராசேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும். ஓய்வுபெற்ற ஆசிரியை பூமகள், கல்வித் திணைக்கள ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் நடராசா, இராசம்மா, நிற்செலாராணி, யாழ் உணவுத் திணைக்களம் இராசேஸ்வரி, ஆசிரியர் சண்முகரெத்தினம், நில அளவையாளர் சந்திரசேகரம், மன்னார் கிளினிக் உரிமையாளர் Dr. சுதிர்காமநாதன் ஆகியோரின் அன்பு மாமனும்,கொழும்பு சிறீபிரசாத் ரேடர்ஸ், சிறீபிரியா ரேடர்ஸ், சுகம் இன் லொஜ், K. R. N ஸ்தாபனம் ஆகியவற்றின் உரிமையாளர் ஸ்கந்தராசா, சாந்தினி (லண்டன்), ராகினி, மருத்துவபீட மாணவன் வரதராசா,மாலினி,சிவரஞ்சனி,கௌசல்யா, அங்கயற்கண்ணி, மங்களச்செல்வி, கலைச்செல்வி, இளங்கோ, யாழ். மருத்துவபீட மாணவன் கடோற்கஜன், ரமேஸ், பாமினி, நிரோஷன், ரமணன், ராகுலன், ரதினி, கிருபாகரன், ரஜனி, சகிலா, அனுஷா, ஜெயக்குமரன், சுஜாத்தா, சுதாகர் ஆகியோரின் அன்புப் பேரனும். பிரசாத். பிரியா, ரமணன், ரம்பா, ரஜீவன், முரளி, தர்சினி, மதுரா, தீபன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20/9, வைரவர் கோவில் லேன், கொட்டடி- யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளிற்காக 14-09-88 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், அன்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ. நடராசா.
கொட்டடி,
யாழ்ப்பாணம். (6485)

மங்களகரமான ஆரம்பம் !
சென். அன்ரனீஸ்
ST. ANTONY'S
நேற்றுமுன்தினம் 12-09-1988 திங்கட் கிழமை பேற்படி எமது ஸ்தாபனம்
தலைமையகம் :
வண. பிதா பிரான்சிஸ் அடிகளார்
அவர்களாலும்
கிளை ஸ்தாபனம் :
திருவாளர் ஜே. அமலசீலன்
(ஆசிரியர், புனித பரியோவான் கல்லூரி)
அவர்களாலும்
மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
உரிமையாளர்கள் :
திரு. பி. இக்னேஷியஸ்
திரு. கி. யூட்ஸ் அன்ரனி
திரு. அ. பேபியன்ஸ்
★ நாம் ஜோன்சன் வெளியிணை இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்களுக்கான அங்கீகாரம் பெற்றுள்ள விநியோகஸ்தர்கள் என்பதை வடபகுதி மீனவ அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்,
★ கடற்றொழில் உபகரணங்கள் வலை, நூல் என்பனவற்றையும் நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறைக்கும் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்.
சென். அன்ரனீஸ்
ST. ANTONY'S
தலைமையகம் :
63,யூதாதேயு கோவில் வீதி,
பாஷையூர், - யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்:
40, கடற்கரை வீதி.
குருநகர், - யாழ்ப்பாணம்.
Best Wishes from,
V. Chandrakumar
Marketing Representative
D. U. Martenstyn Ltd.,
P O. Box 916.
340/10. D, R. Wijewardana Mawatha
COLOMBO-10.
[C-179]

விநாயக ரூர்ஸ்
தென் இந்திய யாத்திரையும்
சிதம்பரத்தில் திருவாதிரை
ஆருத்திரா தரிசனம்
ஆரம்பம்:12-12-1988 முடிவு: 01-01-1989
கட்டணம் 3750/- மட்டும்
விபரங்களுக்கு:
அ. வி. அருணாசலம் (அதிபர்)
விநாயக ரூர்ஸ்
இராஜநாயகி தியேட்டர்,
காங்கேசன் துறை.
(6486)

PERSONAL CLASSES
FOR
PHYSICS
இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
A/L 90
✶ அளவீடுகள்
(புதன், வெள்ளி 3.15 p m)
ஆரம்பம்: 14-9-88 புதன் 3 15p.m
A/L 89
✶ பொறியியல் (நிலையியல்)
செவ்வாய், வியாழன் 3.45 p. m
★ வெப்பவியல்
(வாயுக்களின் விரிவு)
(சனி, ஞாயிறு 5 30 p m)
✶ நிலைமின்னியல்
(செவ்வாய், வியாழன்2 45 p m)
✶ ஒளியியல்
(சனி, ஞாயிறு 4 30 p m)
நடைபெறுகின்றன. (C/190)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ... இல. 292/2 நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 14- 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthavan Publications (pvt) Ltd292/2 Navalar Road, Jaffna on Wednesday 14th September 1988